பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 14

## சிவில் சமூக இயங்குதளத்தின் வாக்குமூலம்



மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் 30/1 மற்றும் 46/1 குறிப்பிடப்பட்ட விடயங்கள் உள்ளடங்கலாக மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு அத்துடன் நிலைமாறுகால நீதி போன்ற விடயங்களில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் எமது நிலைப்பாடுகளை முன்வைக்கும் நோக்கில் நாம் ஒரு சிவில் சமூக இயங்குதளமாக ஒன்றிணைந்துள்ளோம். இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கம் ஏற்றுறுதி செய்த சர்வதேச ஒப்பந்தங்கள் என்பவற்றினால் இலங்கை மக்கள் அனைவருக்கும் உறுதியளிக்கப் பட்டுள்ள பாகுபாடு காண்பிக்கப்படாமை. மனித உரிமைகள் மற்றும் நீதி என்பவற்றின் கொள்கைளின் அடிப்படையில் எமது பணிகளை முன்னெடுக்கும் சிவில் சமூக குழுக்களாக நாம் உள்ளோம். எமது நாட்டின் அனைத்து குடிமக்கள் இடையேயும் சமத்துவம். ஜனநாயகம். சட்டத்தின் ஆட்சி மற்றும் ஒற்றுமை என்பவற்றை மேம்படுத்த அவசியமான சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை. மேலும். உண்மை நீதி... (03 ஆம் பக்கம் பார்க்க...)

## ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அலட்சியம் வேண்டாம்

நாட்டிலே தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டமானது எதிர்வரும் 21 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இவ் ஊரடங்கு சட்டம் மேலும் நீடிப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருக்கிறது. ஏனெனில் தற்போதைய நாளாந்த கொவிட் தொற்றாளர்கள் மற்றும் நாளாந்த மரணங்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டிருப்பதை அரச தகவல் திணைக்களத்தின் கொவிட் அறிக்கையின் படி அறியக்கூடியதாகவிருக்கிறது. எனினும் மருத்துவர்கள், சுகாதாரத் தரப்பினர் மக்களை அலட்சியமாக செயற்படவேண்டாம் என எச்சரித்துள்ளனர். இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றாலும் கொவிட் தொற்ற வாய்ப்பு உள்ளதாகவும் தெரவிக்கின்றனர்.

இலங்கையில் கொவிட் வைரசின் திரிபான டெல்டா தீவிரமாகப் பரவியுள்ளதாகவும், அதன் தாக்கத்தாலே இலங்கையில் திடீரென மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துச்சென்றதாகவும் தகவல்கள் வெளியாகியமை அனைவருக்கும் தெரியும். எனினும் கொவிட் பரவலின் வீரியம் இன்னமும் இலங்கையில் வீழ்ச்சியடையவில்லை என்றே எச்சரிக்கப்படுகிறது.

(03 ஆம் பக்கம் பார்க்க...)

## எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கிவைப்பு



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் 21வது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (16) அம்பாறை மாவட்ட பல பிரதேசங்களில் அவரை ஞாபகப்படுத்தி...

(03ஆம் பக்கம் பார்க்க...)

## விராட் கோலியின் திடீர் முடிவு




பிரபல பெட்ஸ்மேனான விராட் கோலி. இந்திய அணியின் கெப்டனாக நீடித்து வருகிறார். எனினும் இதுவரை ஒரு ஐசிசி கோப்பையையும் அவரால் வெல்ல முடியவில்லை. இதனால் ஏராளமான விமர்சனங்களை எதிர் கொண்டுள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க...)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் தமிழினம்

இந்நாட்டில் தமிழினம் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவது ஒன்றும் புதிய விடயமல்ல. காலகாலமாக தொடர்ச்சியாக மாறி மாறி ஆட்சிக்கு வருபவர்களின் பிரதிநிதிகளால் கைக்கூலிகளால் என தமிழ் மக்கள் அச்சுறுத்தல்களையும். துன்பங்களையும் சந்தித்தே வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக இந்த ஆட்சியிலும் தமிழ் மக்களது நில அபகரிப்பு தொடக்கம் அனைத்து விடயங்களும் கச்சிதமாக நடைபெற்றே வருகின்றது. அண்மைய சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவமும் அரச பிரதிநிதி ஒருவரின் அடாவடித்தனத்தை அப்பட்டமாக. இன்றும் இலங்கையில் தமிழினம் வாழ்வதற்கான அச்ச நிலையில் தான் இருக்கிறது என்பதை. உலகிற்கு மற்றொரு சாட்சியாக. ஐ.நா கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் எடுத்துக்கூறியிருக்கின்றது.

ஒரு இராஜாங்க அமைச்சரால் இவ்வளவு துணிவாக கைதிகளை அச்சுறுத்த முடிகிறதெனில். மேலும் மேலும் தமிழினத்தின் மீதான அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதில் இருந்து தாம் ஒருபோதும் பின்வாங்கவில்லை அல்லது கைவிடவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையின் பல சிறைகளில் வாடும் அப்பாவி இளைஞர்கள் நாளாந்தம் ஆபத்தான நிலையை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கான பாதுகாப்பு அங்கு கேள்விக்குறியாகவிருக்கிறது. பல இளைஞர்கள் சிறைகளுக்குள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தாக்கப்பட்டுள்ளார்கள்.

ஒரு இராஜாங்க அமைச்சருக்கு மனித உரிமைகளை மதிக்கத் தெரியவில்லை எனில். அடாவடியாக செயற்பட்டிருக்கும் இவ்வமைச்சரை பதவியில் இருந்து மாத்திரம் நீக்கினால் போதுமா? பதவியில் இருக்கிறேன் என்கிற மமதையில் இவ்வாறு செயற்பட்டிருக்கும் இவரை யார் தட்டிக்கேட்பது. ஒரு ஜனநாயக நாடு என்று கூறப்படும் இலங்கை. எப்போது அதற்குரிய பண்புகளுடன் பயணிக்கப்போகிறது!

## சேதனப் பசளைக்கு அனுமதி

தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் உள்ளிட்ட பயிர்ச்செய்கைக்கு தேவையான சேதன பசளையை இறக்குமதி செய்யரூடெிளி இரண்டு அரச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களுக்கு ஒத்துழைப்பு மற்றும் மகளிர் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கடன் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தில் வழங்கப்பட்டுள்ளது.

பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டு பின்னர் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலுக்கு அமைய பாடசாலைகளை ஆரம்பிப்பது அவசியமாகும். இதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக உலகளாவிய ரீதியில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதி தலைமையிலான கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவலை தடுப்பதற்கான செயலணி தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் மேலும் 118 கொவிட் மரணங்கள் நேற்று (16.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,817 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 2271 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 498,694 ஆக அதிகரித்துள்ளது.

## அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் கோரிக்கை

நிறைவடைந்த உயர்தர பரீட்சை மற்றும் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்பதற்கான காலத்தினை மேலும் நீடிக்குமாறு அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் தொழிற்சங்க போராட்டத்தினால் மாணவர்கள் நலனை கருத்திற்கொண்டு அதற்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை கல்வி பொதுத் தராதர உயர் தரப்பரீட்சைக்கு 249,841 பேர் விண்ணப்பித்துள்ளனர். அத்துடன், 5ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சைக்கு 243,704 பேரும் விண்ணப்பித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு 301,471 பேரும், 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்காக 331,740 பேரும் விண்ணப்பித்திருந்தனர்.

இந்நிலையில், உயர்தர பரீட்சை மற்றும் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்பதற்கான காலத்தினை மேலும் நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியதன் பின்னர் அது தொடர்பான தீர்மானம் அறிவிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



## சிவில் சமூக இயங்குதளத்தின்...

மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின்பால் கடப்பாடு கொண்டவர்களாகவும் நாம் உள்ளோம்.

உலகிலுள்ள அனைத்து மக்களைப் போன்றே, கடந்த மார்ச் 2020 தொடக்கம் கொவிட்–19 தொற்றுநோய் காரணமாக இலங்கையும் முன்னொருபோதுமில்லாதவாறு சுகாதார மற்றும் பொருளாதார சவால்களை சந்தித்து வருகின்றதுடன் இந்நிலை ஆழ வேரூன்றியுள்ள முறைமை மற்றும் கட்டமைப்பு சமத்துவமின்மைகளை சுட்டிக்காட்டுகின்றது. இது நம்மை ஒரு மனித நாகரிமாக பிணைக்கும் சமூக அமைப்பை கட்டிக்காப்பதற்கு மனித உரிமைகளை பாதுகாக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது. இவ்வாறான சூழமைவு ஒன்றுக்குள் கடந்த 2020இல் நிலவிய தொற்று நோயின் முதல் அலையின் போது இலங்கை மக்களுக்கு மருத்துவப் பராமரிப்பு மற்றும் நிவாரணங்களை வழங்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நாம் அங்கீகாரம் வழங்குகின்றோம். எனினும் அதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் செயற்படாநிலை என்பன மக்கள் எதிர்கொண்ட சவால்களை மேலும் தீவிரமாக்கவே வழிவகுத்தன. அதேநேரத்தில் கொவிட்–19 தொற்றுநோய்க்கான பதில் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக அனைத்து நடவடிக்கைகளிலும் அதிகாரத்தைப் பிரயோகித்தல் மற்றும் இராணுவ மயமாக்கல் அத்துடன் தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாச்சாரம் என்பன குடியியல் தளத்தை நலிவாக்குவதுடன் மனித உரிமைகளின் பாதுகாப்புக்கும் முட்டு க்கட்டையாக அமைகின்றது. உணவு விநியோகத்தை சீராக்குதல் என்ற போர்வையில் அவசரகால நிலை மீள ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் மேலதிகக் கரிசனையொன்றாக அமைகின்றது. எதேச்சையான முறையில் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டமை நிறைவேற்றுத்துறையின் கைக ளில் கட்டுக்கடங்காத அதிகாரத்தை வழங்கியுள்ளதுடன் இந்நிலை பொது மக்கள் நன்மை தொடர்பில் ஜனநாயக ரீதியில், உள்வாங்கும் தன்மையுடன் அத்துடன் வெளிப்படைத்தன்மை மிக்க வகையில் தீர்மானங்களை மேற் கொள்வதற்கு உகந்ததாக அமையாது. இது குடிமக்களின் மனித உரிமைகளை மேலும் கட்டுப்படுத்தும் மற்றும் மீறும் சூழல் ஒன்றையே உருவாக்கும்.

எந்தவித மிரட்டல் அல்லது தொந்தரவும் இன்றி சிவில் சமூகம் செயற்படுவதற்கு, குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் செயற்படுவதற்கு உகந்த சூழல் ஒன்று நிலவவேண்டும் என்பதும் அச்சமூகம் தொடர்ச்சியாக மனித உரிமைகள் மற்றும் நிலைமாறுகால நீதி விவகாரங்களில் ஆதரித்து வாதிடல் இயலுமானதாக இருக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். கடந்த பல வருடங்களாக சிவில் சமூகம் குடியியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக உரிமைகள் தொடர்பில் காணப்படும் பெரிய மற்றும் சிறிய சவால்களை தீர்ப்பதற்கு பாரிய அளவில் பங்களித்து வந்துள்ளது, அத்துடன் இலங்கையின் அனைத்து சமூகங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புகள் அனைத்துக்கும் அங்கீகாரம் வழங்க நாம் விரும்புகின்றோம். கடந்த நவம்பர் 2019 முதல் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் சிவில் சமூகத்துடன் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான மற்றும் நட்பான முறையில் ஈடுபாட்டைக் காண்பிக்கத் தவறியுள்ளது. அவ்வாறான ஈடுபாடு இல்லாத நிலையில் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) இந்த 48ஆவது அமர்வு மற்றும் உண்மை, நீதி, நட்டஈடுகள் மற்றும் மீண்டும் தோன்றாமை தொடர்பில் இலங்கைக்கு வருகை தந்த விசேட அறிக்கையாளர் வழங்கிய அறிக்கை.
(நோக்குக: A/HRC/48/60/Add.6) இலங்கை அரசாங்கத்தின் அறிக்கைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு பின்வரும் விவகாரங்களை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

1. சிவில் சமூகம் செயற்படுவதற்கு உகந்த சூழ்நிலை அண்மைய மாதங்களில் இலங்கையில் சிவில் சமூகத்துக்கான தளம் எச்சரிக்கையடையும் வகையில் சுருங்கி வருவதை நாம் கண்ணுற்றுள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் போன்ற மனித உரிமைகள், நீதி மற்றும் உண்மை தொடர்பில் ஆதரித்து வாதிடும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஏற்படுத்தப்படும் தொந்தரவு, அதிகரிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் என்ற சூழமைவு ஒன்றில் இவ்விடயம் அமைந்துள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிகளுக்கும் அரசாங்கம் மற்றும் அதனுடன் இணைந்துள்ள தரப்புகளால் பல வழிமுறைகளில் அச்சநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறான அமைப்புகள் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவை என சித்தரிக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியின் கீழ் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் (NGO செயலகம்) கடந்த டிசம்பர் 2019இல் பாதுகாப்பு அமைச்சின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டது, மேலும், சிவில் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கான சட்டவாக்க வரைபை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்கு மேலதிகமாக, கடந்த நவம்பர் 2019 தொடக்கம் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் சிவில் சமூக நிறுவனங்கள் தமது திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முறைசாரா மற்றும் எதேச்சையான விதிகளைப் பின்பற்றவேண்டும்.

(நாளைய இதழில் தொடரும்...)

## ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும்...

தற்போது நாளாந்த மரணங்களின் எண்ணிக்கையானது 200இற்கும் குறைவாகப் பதிவாகிவருகின்ற நிலையில், மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். வேலையில்லாப் பிரச்சினை தலையெடுத்துள்ளது. மக்களது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை தொடர்ச்சியாக வழங்கும் நிலையில் அரசும் இல்லை. பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள அரசு, பிற நாடுகளிடம் கடன் வாங்கும் அளவிற்குச் சென்றுள்ளது. இவ் இக்கட்டான தருணத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றமானது மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

தொடர்ந்தும் நாட்டை முடக்கிவைத்திருந்தால் நாட்டு மக்கள் உணவுப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையும் வரும். எனினும் டெல்டா வைரஸ் தொடர்பில் இன்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாடு திறக்கப்பட்டாலும் மக்கள் மிக அவதானமாக செயற்படவேண்டும். தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளை முன்புபோலவே கடுமையாகக் கடைபிடிக்கவேண்டும். அலட்சியம் வேண்டாமே!

## விராட் கோலி...

இந்நிலையில் டி20 உலகக் கோப்பைப் போட்டிக்குப் பிறகு டி20 கெப்டன் பதவியிலிருந்து விலகுவதாக விராட் கோலி நேற்று அறிவித்துள்ளார். இதுபற்றிய அறிக்கையில் அவர் கூறியதாவது, கடந்த 8, 9 வருடங்களாக மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடி வருகிறேன். 5, 6 வருடங்களாக கெப்டனாக உள்ளேன். இந்திய டெஸ்ட், ஒருநாள் அணிகளை வழிநடத்த டி20 உலகக் கோப்பைப் போட்டிக்குப் பிறகு டி20 கெப்டன் பதவியில் இருந்து விலகுகிறேன். இதுபற்றி ரவி சாஸ்திரி, ரோஹித் சர்மாவிடம் விவாதித்த பிறகே இம்முடிவை எடுத்தேன். கங்குலி, ஜெய் ஷா, தேர்வுக்குழுவினர் ஆகியோரிடமும் இதுபற்றி தகவல் தெரிவித்துள்ளேன். இந்திய அணிக்காகத் தொடர்ந்து என்னுடைய திறமையை வெளிப்படுத்துவேன் என்று கூறியுள்ளார்.

## எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின்...

(பைஷல் இஸ்மாயில்)

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மர நடுகையும், மர்ஹூம் அஷ்ரபின் ஈடேற்றத்துக்கான விசேட துஆப் பிராத்தனைகள், கத்தமுல் குர்ஆன் தமாம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றது.

பாலமுனை பிரதேசத்தில் மர்ஹூம் அஷ்ரப் நினைவுதின நிகழ்வுகளை கட்சியின் உயர் பீட உறுப்பினரும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளருமான எஸ்.எம்.எம்.ஹனிபா மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாலமுனை அமைப்பாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ.எல்.எம். அலியார் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது. மர்ஹூம் அஷ்ரபின் 21வது நினைவு தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டது. இந் நிகழ்வுகளில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், உலமாக்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் என மட்டுப்படுத்தப்பட்டளவில் கலந்துகொண்டனர்.



# பிராவோ சாதனை



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியின் ஓல்ரவுண்டர் வெய்ன் பிராவோ டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் ஓய்வு பெற்ற அவர் 20 ஓவர் ஆட்டங்களில் மட்டும் விளையாடி வருகிறார். இந்த நிலையில் 37 வயதான பிராவோ 20 ஓவர் போட்டிகளில் 500 ஆட்டங்களில் விளையாடி சாதனை படைத்துள்ளார். அவர் கரீபியன் லீக் 20 ஓவர் தொடரில் செயிண்ட் கீட்ஸ்-நேவிஸ் பெட்ரியாட்ஸ் அணிக்கு கேப்டனாக உள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் அந்த அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் செயிண்ட் லூசியா கிங்சை தோற்கடித்தது. இந்த போட்டி 20 ஓவரில் பிராவோவுக்கு 500வது ஆட்டமாகும். 20 ஓவரில் 500 போட்டிகளில் விளையாடிய 2வது வீரர் பிராவோ ஆவார். இதற்கு முன்பு வெஸ்ட் இண்டீசை சேர்ந்த பொல்லார்ட் இந்த அரிய சாதனையை படைத்திருந்தார். பிராவோ 500 போட்டிகளில் 388 இன்னிங்ஸ் விளையாடி 6.574 ரன்கள் எடுத்து உள்ளார். 540 விக்கெட் வீழ்த்தி இருக்கிறார்.

2006ம் ஆண்டு சர்வதேச 20 ஓவர் போட்டியில் அறிமுகமான அவர் 2010ல் டெஸ்டில் இருந்தும். 2014ல் ஒருநாள் போட்டியில் இருந்தும் ஓய்வு பெற்றார். பிராவோ சென்னை சூப்பர் கிங்ஸ் உள்பட பல்வேறு அணிகளில் இடம்பெற்று உலகின் பல நாடுகளில் நடைபெற்றுவரும் 20 ஓவர் தொடர்களில் விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. - அப்துல் ஜெப்பார் அப்துல்லா

# உலக சாதனைகள் அடங்கிய புத்தகம் வெளியீடு

கால்கள் இல்லாமல் பிறந்த அமெரிக்காவின் Zion Clark, 4.78 விநாடிகளில் 20 மீட்டர் தூரத்தை தன் இரு கைகளால் கடந்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். Ivory Coast-I சேர்ந்த Laetitia Ky தன் நீண்ட கூந்தலை ஸ்கிப்பிங் கயிராக பயன்படுத்தி 30 வினாடிகளில் 60 ஸ்கிப்பிங் செய்து இடம்பிடித்துள்ளார்.

உலகின் மிக குள்ளமான பொடி பில்டராக 102 சென்டி மீட்டர் உயரமுடைய இந்தியாவைச் சேர்ந்த PRATIK MOHITE வும், மிக உயரமான ஆண் பொடி பில்டராக 218.3 சென்டி மீட்டர் உயரமுடைய நெதர்லாந்தைச் சேர்ந்த OLIVIER RICHTERSம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர்.

# விண்வெளித்துறையில் புதிய மைல் கல்

உலகிலேயே முதன்முறையாக பொதுமக்களை விண்வெளிக்கு அனுப்பி உலகமே வியந்து பார்க்கும் சாதனையை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் படைத்துள்ளது. கடந்த பல ஆண்டுகளாக பல நாடுகள் விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாலும், பயிற்சி பெற்ற விண்வெளி வீரர்கள் தவிர பொதுமக்கள் யாரும் இதுவரை விண்வெளிக்கு சென்றதில்லை. இந்த நிலையில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் நிலவு மற்றும் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்ப முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

அதன் முதற்கட்டமாக ஸ்பேஸ் எக்ஸ் நான்கு பொதுமக்களை வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. நேற்று அமெரிக்காவின் கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து நான்கு பேருடன் புறப்பட்ட பால்கன் 9 ராக்கெட் வெற்றிகரமாக விண்வெளியை அடைந்துள்ளது. 3 நாட்கள் பூமியின் வட்டப் பாதையில் சுற்றிவிட்டு ப்ளோரிடா கடற்கரை அருகே விண்கலம் தரையிரங்கும் என கூறப்பட்டுள்ளது. இதேவேளை இந்த சம்பவம் விண்வெளி பயண வளர்ச்சியில் இது ஒரு மைல் கல்லாக பார்க்கப்படுகிறது.



# செல்வாக்கு மிக்க தலைவர் பட்டியலில் தலிபான் தலைவர்

டைம் இதழின் செல்வாக்கு மிகுந்த நூறுபேர் பட்டியலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி. அமெரிக்க அதிபர் ஜோ பைடன். சீன அதிபர் ஷி ஜின்பிங். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோர் இடம்பிடித்திருக்கின்றனர். இவர்களுடன் தலிபான் மூத்த தலைவரும். ஆப்கானிஸ்தா னின் துணைப் பிரதமருமான அப்துல் கனி பராதர் பெயரும் இடம்பெற்றுள்ளது. தோகாவில் அமெரிக்காவுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் தலிபன்கள் சார்பில் பங்கேற்றவரும். படை வெளியேற்ற உடன்பாட்டில் கையெழுத்திட்டவரும் அவர்தான். தலிபான்களின் அரசியல் முகமாக அவர் பார்க்கப்படுகிறார். அண்மையில் அறிவிக்கப்பட்ட தலிபான்களின் அரசில் அவருக்கு துணைப் பிரதமர் பொறுப்பு வழங்கப்பட்டது. இந்தப் பட்டியலில் "ஆப்கானிஸ்தானின் வருங்காலத்தின் அச்சு" அவர் என்றும் அவரைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உலகின் செல்வாக்கு மிகுந்த நூறுபேர் பட்டியலை டைம் இதழ் வெளியிட்டிருக்கிறது. பல்வேறு பிரிவுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. தலைவர்கள் என்ற பிரிவின் கீழ் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். துணை அதிபர் கமலா ஹாரிஸ். சீன அதிபர் ஷி ஜின் பிங். அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தலைவர்களைப் பற்றிய குறிப்புகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன. அப்துல் கனி பராதரைப் பற்றிய குறிப்பை பாகிஸ்தான் பத்திரிகையாளர் அகமது ரஷீத் எழுதியுள்ளார். கடந்த ஓகஸ்டில் தலிபான்களுக்குக் கிடைத்த வெற்றி. பராதர் நடத்திய பேச்சுவார்த்தையின் ஒரு பகுதி என்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். யாருக்கு மன்னிப்பு வழங்குவது போன்ற அனைத்து முக்கிய முடிவுகளையும் தலிபான் இயக்கத்தின் சார்பில் பராதரே எடுப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. தலிபான்களில் ஒப்பீட்டளவில் மிதவாதப்போக்கு கொண்டவர் அவர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. அவருக்கும் தலிபான்களின் அமைச்சரவையில் உள்ள வேறு சிலருக்கும் மோதல் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்தன. தலிபான்களுக்கு வெற்றி கிடைத்தது பேச்சுவார்த்தைகள் மூலமாகவா அல்லது சண்டைகள் மூலமாகவா என்பதில் முரண்பாடு ஏற்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. பேச்சு நடத்தியவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று பராதர் விரும்புவதாகவும் ஆனால் சண்டை புரிந்தவர்களே முக்கியம் என ஹக்கானி குழுவைச் சேர்ந்தவர்கள் கூறுவதாகவும் செய்திகள் தெரிவித்தன. சில நாள்களாக காணாமல் போயிருந்த பராதர் இந்தச் செய்திகளை மறுத்திருக்கிறார்.